# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8069084

1. District : மாவட்டம் சிவகங்கை
   PS: காவல்நிலையும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் – பிரிவு
   Year: ஆண்டு 2023
   FIR No. மு.த.அ. எண் 5/2023
   Date: நாள் 21/08/2023

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: Prevention of Corruption Act Sections பிரிவுகள்: 7
   (iii) Act சட்டம்: 1988 as amended by the PC (amendment) Act 2018. Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from நாள் முதல் : 31.07.2023
   Date to : நாள் வரை 17.08.2023
   Time Period : நேர அளவு
   Time from : நேரம் முதல்
   Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 21.08.2023
   Time நேரம் 09.50 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol-II
   Time : நேரம் 10.30 hrs

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 55 Km வடகிழக்கு,
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி நகராட்சி அலுவலகம், தேவகோட்டை, சிவகங்கை மாவட்டம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
   District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் செல்வி.செ.பிரவீனா
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் செல்வத்துரை
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 23/2023
   (d) Nationality : நாட்டினம் இந்தியன்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்
   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் —
   (g) Address : முகவரி க.எண்: 7, சுந்திரத்தார் தெரு, தேவகோட்டை, சிவகங்கை மாவட்டம்,

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு. மதன்குமார், Bill Collector, நகராட்சி அலுவலகம், தேவகோட்டை, சிவகங்கை மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   — உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 21.08.2023 தேதி காலை 09.50 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை, சத்திரத்தார் தெரு, க.எண்.7 என்ற முகவரியில் வசிக்கும் செல்லத்துரை மகள் செல்வி.பிரவீனா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துப்பூர்வமான புகார் மனுவை பெற்று இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சுமத்தப்பட்ட தேவகோட்டை நகராட்சி Bill Collector திரு.மதன்குமார் ஆகியோர் பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்தும் புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தெற்கு சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசி வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று 21.08.2023-ம் தேதி காலை 10.30 மணிக்கு சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.5/2023 u/s 7 of Prevention of Corruption Act 1988 as amended by the PC (Amendment) Act 2018

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS...........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 21/08/2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

[signature]
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

21.08.2023 at 11.00 hrs.

Name: பெயர் R. ஜேசுதாஸ்,
Rank: நிலை ....................No. எண் .........
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
சிவகங்கை.

சிவகங்கை ஊ.த.க பிரிவு குற்ற எண்.5/2023 முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி -

என வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு, அனுப்புநர், பிரவீனா, வயது 23/2023, த/பெ.செல்லத்துரை, க.எண்.7, சத்திரத்தார் தெரு, தேவகோட்டை, சிவகங்கை மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, சிவகங்கை. ஐயா, நான் மேற்கண்ட முகவரியில் எனது மாமா திரு.வன்மீகநாதன், அம்மா திருமதி.சாந்தி மற்றும் பாட்டி ஆகியோருடன் வசித்து வருகிறேன். நான் B.A., L.L.B, படித்துள்ளேன். எனது தாயாரின் உடன்பிறந்த சகோதரர் திரு.வன்மீகநாதன் உடல் ஊனமுற்றவர் ஆவார். எனது மாமா தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட செப்பவயலார் என்ற இடத்தில் 700 சதுரடி பரப்பளவில் புதிய கான்கிரீட் வீடு கட்டியுள்ளார். எனது மாமாவால் நடக்க முடியாததால், மேற்படி வீட்டிற்கு வீட்டு வரி இரசீது போடுவதற்கு உண்டான வேலையை என்னிடம் ஒப்படைத்தார். நான் கடந்த 24.07.2023 அன்று தேவகோட்டை நகராட்சி அலுவலகத்திற்கு சென்று, அங்கிருந்த நகராட்சி ஊழியர் திரு.ஜான் என்பவரிடம் வீட்டு வரி இரசீது கோரி காலி மனையிட இரசீது, பட்டா, பிளான் அப்ரூவல், வில்லங்க சான்று ஆகியவற்றின் நகல்களை கொடுத்தேன். அவர் அவற்றை வாங்கி, கணிணியில் பதிவேற்றம் செய்துவிட்டு, 2 நாட்கள் கழித்து bill collector வந்து "உங்கள் வீட்டை பார்ப்பார்கள்" என கூறினார். அதன்படி, 26.07.2023 அன்று தேவகோட்டை நகராட்சி Bill Collector திரு.மதன்குமார் எங்களது மாமா புதிதாக கட்டியுள்ள வீட்டிற்கு வந்து, வீட்டினை பார்த்துவிட்டு, மறு நாள் Revenue Inspector-வுடன் வருவதாக தெரிவித்து சென்றார். பின்பு 27.07.2023 அன்று மேற்படி Bill Collector திரு.மதன்குமார் மற்றும் Revenue Inspector திரு.முத்துக்கிருஷ்ணன் ஆகியோர் எனது மாமா வீட்டிற்கு வந்து வீட்டினை அளவீடு செய்துவிட்டு, வருகின்ற திங்கட்கிழமை நகராட்சி அலுவலகத்திற்கு வந்து தன்னை பார்க்குமாறு Bill Collector திரு.மதன்குமார் என்னிடம் தெரிவித்துவிட்டு சென்றார். அதன்படி, நான் 31.07.2023ம் தேதி திங்கட்கிழமை அன்று தேவகோட்டை நகராட்சி அலுவலகத்திற்கு சென்று அங்கிருந்த Bill Collector திரு.மதன்குமார் அவர்களிடம் வீட்டு வரி தொடர்பாக பேசியபோது, அவர் என்னிடம், "உங்கிட்ட எப்படி சொல்லுறது, நீ சின்ன பொண்ணா இருக்க, உங்கிட்ட formalities எப்படி கேட்குறது" என்று சொன்னார். நான் அவரிடம் சும்மா சொல்லுங்க சார் என்று சொன்னவுடன், வீட்டு வரி இரசீது போடுறதுக்கு ரூ.15000/- கொடுக்கணும்"

என்றார். இது வீட்டு வரி இரசீது பெறுவதற்கு கட்ட வேண்டிய பணமா சார் என்று கேட்டேன். அதற்கு அவர், நீங்கள் இரசீது பெறும்போது தனியாக பணம் கட்ட வேண்டும். இது இரசீது போட ஏற்பாடு பண்றதுக்கு எல்லாருக்கும் கொடுக்கிறதுக்கு ரூ.15000/- கேட்கிறேன் என்றார். நான் அவரிடம் சார் பார்த்து சொல்லுங்க, நாங்க ரொம்ப கஷ்டப்படுற குடும்பம் சார் என்று சொன்னேன். அதற்கு அவர், ரூ.8000/- கொடு, நான் எல்லாருக்கும் கொடுக்கணும், பணம் கொடுத்தால்தான் வீட்டுவரி இரசீது போடுறதுக்கு ஏற்பாடு செய்ய முடியும் என்று கூறினார். நான் அங்கிருந்து வந்துவிட்டேன். சில நாட்கள் கழித்து எனது மாமா, வீட்டு வரி இரசீது என்னாச்சுனு தேவகோட்டை நகராட்சி அலுவலகத்திற்கு சென்று கேட்குமாறு என்னிடம் கூறினார். எனவே, நான் 17.08.2023 அன்று மதியம் சுமார் 3.30 மணியளவில் தேவகோட்டை நகராட்சி அலுவலகத்திற்கு சென்று Bill Collector திரு.மதன்குமார் அவர்களை சந்தித்து வீட்டு வரி இரசீது பற்றி கேட்டபோது, அவர் என்னிடம், நான் கேட்ட பணம் ரூ.8000/-ஐ கொண்டு வந்திருக்கீங்களா என்று கேட்டார். நான் இல்லங்க சார், எங்க மாமா ஊனமுற்றவர், ரொம்ப கஷ்டப்படுறோம், கொஞ்சம் குறைத்துக்கொள்ளுங்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் என்னிடம், சரிம்மா, உனக்காக குறைத்துக்கொள்கிறேன், இறுதியாக ரூ.5000/- கொடு, இதுக்கு மேல குறைக்காத என்று கூறினார். பின்னர் வந்து சந்திக்கிறேன் என்று சொல்லிவிட்டு நான் அங்கிருந்து வந்துவிட்டேன். எனது மாமாவிடம் இதுபற்றி சொன்னபோது, அவர் நீ படித்த புள்ள, நான் உனக்கு சப்போர்ட் பண்றேன், நீ சட்டப்படி என்ன செய்ய நினைக்கிறாயோ, அப்படியே பண்ணு என்று சொன்னார். எனக்கும் எனது மாமாவிற்கும் லஞ்சம் கொடுத்து வீட்டு வரி இரசீது பெற விருப்பம் இல்லை. அதனால், எனது மாமாவின் வீட்டிற்கு வீட்டு வரி இரசீது வழங்க என்னிடம் ரூ.5000/- லஞ்சம் கேட்ட தேவகோட்டை நகராட்சி Bill Collector திரு.மதன்குமார் என்பவர் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம்) செ.பிரவீனா, 21/08/23,

Sir, Received the complaint on 21.08.2023 at 09.50 hrs, the genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedent of the accused was also verified through sources and found bad. Found Prima-facie for the allegation of the complainant. Since the registration of regular case is warranted, the matter is intimated to the SP/SR, V&AC, Chennai and registered a case in

Sivagangai, Vigilance and Anti-Corruption Detachment Crime No.5/2023 U/s.7 of Prevention of Corruption Act 1988 as amended by the PC (Amendment) Act 2018 on 21.08.2023 at 10.30 hrs and took up for Investigation. (Sd)R.Jesudoss, 21.08.2023, Inspector/V&AC/SVG.

The original FIR along with original complaint is submitted to the Hon'ble Special Judge, Special Court for Trial of Cases under P.C. Act; Sivagangai and the copies submitted to the concerned officers.

21/8/23
Inspector of Police
V&AC, Sivagangai